**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்</u>**

**<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>**

Pro.O.P No: 7/2021 நாள் 25.09.2025

ம.சா.1 , திரு. இமயன்

**மா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1 மற்றும் 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் இந்த மனுவானதை உயில் மெய்ப்பிக்க வேண்டி தாக்கல் செய்துள்ளேன். உயில் ஆவணமானதை என் அப்பா என் பெயருக்கு எழுதிக்கொடுத்தது. அந்த உயில் ஆவணம் எனக்கு என் அப்பா எழுதிக்கொடுத்தது என்று எனக்கு எப்படி தெரியும் என்று கேட்டல் என் அப்பா இறந்தபோய் 16 வது நாள் காரியத்தின் போது தெரியும். என் அப்பா 13.06.2019 ம் ஆண்டு இறந்துபோனார். உயில் ஆவணமானதை அவர் 20.12.2018 ம் ஆண்டு எழுதியதாக தெரிந்துகொண்டேன் . உயில் ஆவணம் எழுதியது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. அதில் சாட்சிகளாக என் தாயார் பெயர் கனகரத்தினமும்,அன்பழகன் என்பவரும் கையொப்பம் செய்துள்ளார்கள். நோட்டரி பப்ளிக் எஸ்.இளங்கோவன் என்பவர் சான்றொப்பம் செய்துள்ளார். மேற்படி உயில் ஆவணம் எங்கு வைத்து எழுதப்பட்டுள்ளது என்றுகேட்டால் ஸ்ரீவில்லிபுத்தூரில் வைத்து எழுதப்பட்டதாக என் தாயார் சொல்லி எனக்கு தெரியும். உயில் கண்ட சொத்தானது யார் பெயரில் வாங்கியுள்ளது என்று கேட்டால் வீட்டில் மூத்தவர் என்ற முறையில் என் அப்பா பெயரில் வாங்கப்பட்டது கிரைய தொகையை நான் தான் கொடுத்தேன். என் அப்பா உயில் ஆவணம் எழுதியது பற்றி என் அப்பா இறந்து 16 ம் நாள் காரியத்தின் போது எனக்கு தெரியும் என்று சொல்லும் போது இந்த விசயம் என் சகோதரிகளுக்கு தெரியுமா என்று கேட்டால் தெரியும். உயில் ஆவணம் எழுதி வைப்பதற்கு என் சகோதரிகள் ஆட்சேபணை எதுவும் தெரிவித்தார்களா என்று கேட்டால் ஆரம்பத்தில் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 25th day of September 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.